KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kalanjiyam.v6i03.62

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

தூப்புக்காரி புதினத்தில் சமூகச் சிக்கல்களும் தீர்வுகளும்

Social Issues and Solutions in the Novel Thoopukari

திருமதி கி. சுமதி[1,*], முனைவர் மு. சு. கண்மணி[2]

[1] பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை மற்றும் உயராய்வு மையம், ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை 630 303 (அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி, இணைவு பெற்றது)
[2] நெறியாளர், இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை மற்றும் உயராய்வு மையம், ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை 630 303
***Corresponding author:** திருமதி கி. சுமதி, karukrishnank@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 1 November 2026
Revised: 6 November 2026
Accepted: 8 November 2026

Article ID
KIJTS-2026-0044

Peer review
Double-blind peer review

Keywords
Thoopukari
society
social issues
caste oppression
feminist oppression
denigration of labor
economic exploitation

ABSTRACT

Malathi's novel Thoopukari is a social novel written centering on the lives of Dalit women sanitation workers. Malarvathi stands out in the literary world as a young writer producing works focused on social justice and humanism. This novel deeply highlights various issues such as caste oppression, patriarchal/feminist oppression, denigration of labor, and economic exploitation. It depicts the tragic lives of sanitation workers both emotionally and realistically. This paper explains that education is the solution to uplift their standard of living.

How to cite this article: திருமதி கி. சுமதி, & முனைவர் மு. சு. கண்மணி (2026). தூப்புக்காரி புதினத்தில் சமூகச் சிக்கல்களும் தீர்வுகளும். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 729. https://doi.org/10.63300/kalanjiyam.v6i03.62
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

ஆய்வுச் சுருக்கம்

மலர்வதியின் *தூப்புக்காரி* புதினம், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பெண் தூய்மைப் பணியாளர்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட சமூக நாவலாகும். சமூக நீதியையும் மனித நேயத்தையும் மையமாகக் கொண்டு

படைப்புகளைத் தரும் இளம் எழுத்தாளராக மலர்வதி இலக்கிய உலகில் திகழ்கின்றார். சாதிய அடக்குமுறை, பெண்ணிய அடக்குமுறை, தொழிலின் அவமதிப்பு, பொருளாதாரச் சுரண்டல் முதலிய பல்வேறு சிக்கல்களை இப்புதினம் ஆழமாக எடுத்துரைக்கின்றது. தூய்மைப் பணியாளர்களின் துயரமான வாழ்க்கையை உணர்வுபூர்வமாகவும் யதார்த்தமாகவும் வெளிப்படுத்துகின்றது. அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வழி கல்வியே என்ற தீர்வை இக்கட்டுரை விளக்குகின்றது.

திறவுச் சொற்கள்

தூப்புக்காரி, சமூகம், சமூகச் சிக்கல்கள், சாதிய அடக்குமுறை, பெண்ணிய அடக்குமுறை, தொழிலின் அவமதிப்பு, பொருளாதாரச் சுரண்டல்.

முன்னுரை

மக்களின் நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கம் ஆகியவற்றை அறிந்து கொள்ள உறுதுணையாக இருப்பவை இலக்கியங்கள் ஆகும். இலக்கியத்திற்கு மட்டுமின்றி வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்த பெருமை நம் தமிழுக்கு உண்டு. இத்தகைய சிறப்புகளைப் பெற்றிருக்கும் இலக்கியங்களில் புதினமும் ஒரு வகையாக அமையப்பெற்றது.

அவ்வகையில், இளம் எழுத்தாளருக்கான 'யுவபுரஸ்கார்' விருதினைப் பெற்ற மலர்வதியின் *தூப்புக்காரி* புதினம், சமூகத்தின் அடித்தளத்தில் வாழும் தூய்மைப் பணியாளர்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்டதாக அமைகின்றது. அவர்கள் எதிர்கொள்ளும் சமூகச் சிக்கல்களையும் அதற்குரிய தீர்வுகளையும் ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.

தூப்புக்காரி – பெயர் விளக்கம்

'தூப்புக்காரி' என்பது நாகர்கோவில் வட்டாரச் சொல். துப்புரவு செய்யும் பெண்ணைக் குறிக்கின்றது; அதாவது கூட்டிப் பெருக்கி அள்ளுவதைக் குறிக்கின்ற சொல். கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் வட்டார வழக்கில் பெண் தூய்மைப் பணியாளர்களை தூப்புக்காரி என அழைக்கின்றனர்.

தூப்புக்காரி – கதைச் சுருக்கம்

மகி என்ற மருத்துவமனையில் துப்புரவுப் பணியாளராகவ் வேலை செய்பவர் கனகம். மருத்துவமனை வளாகத்தைச் சுத்தம் செய்வது, கழிவறைகளைக் கழுவுவது, குழந்தை பெற்றெடுத்தப் பெண்ணின் இரத்தக்கறை படிந்த துணிகளைத் துவைப்பது போன்றவை கனகத்தின் வேலையாக இருந்தது. தனது கணவன் இறக்கும் தருவாயில் ஏற்பட்ட மருத்துவக் கடனைத் தீர்க்கும் விதமாகக் கனகம் அம்மருத்துவமனையில் வேலை செய்து வந்தார்.

கனகத்தின் மகள் பூவரசி ஏழாம் வகுப்பு வரை படித்தவள்; வீட்டிலிருந்து துணி தைத்து வந்தாள். பூவரசி வசதி படைத்த மனோவைக் காதலிக்கிறாள். வறுமையின்

காரணமாக கனகமும் ரோஸ்லியும் மனோவின் அண்ணன் திருமணத்திற்கு எச்சில் இலையெடுக்கச் சென்றிருந்தனர். பசியின் கொடுமையால் சாப்பிட்டு விட்டு இலையெடுக்கலாம் என்று சாப்பிட உட்கார்ந்தவர்களை அவமானப்படுத்தி வெளியேற்றினான் மனோவின் மாமன். உணவிற்காக அனைவருக்கும் முன் அவமானப்படுத்தப்பட்ட கனகம் உடல்நலம் பாதிக்கப்படுவதால் பூவரசியும் அதே தொழிலுக்குத் தள்ளப்படுகிறாள். தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த மாரி கழிவறைகளைச் சுத்தம் செய்கின்ற தொழிலைச் செய்கிறான். மாரி பூவரசியின் மீது காதல் கொண்டு கனகத்திடம் தன் நண்பனை விட்டுப் பெண் கேட்கிறான். கனகமோ சாதியைக் காரணம் காட்டி மறுத்து விடுகிறாள்.

மனோவின் மீது கொண்ட காதலினால் கருவுறுகிறாள் பூவரசி. தன் குடும்பத்தை எதிர்கொள்ள திராணியில்லாத மனோவோ காதலியை விடுத்து, தன் பெற்றோர் பார்த்த பெண்ணை மணந்து கொண்டு வெளிநாடு செல்கிறான். தன் மகள் ஏமாற்றப்பட்டதை அறிந்த கனகம் தன் உயிரை விடுகிறாள். பூவரசியின் நிலையை அறிந்த மாரி அவளையும் அவள் வயிற்றில் வாழும் குழந்தையையும் தன்னுடையதாக ஏற்றுக் கொள்கிறான். ஆனால் விபத்தில் மாரி இறந்து விடுகிறான். சுபா மருத்தரின் வழிகாட்டுதலின் பேரில், தத்தெடுக்க வந்தவர்களுக்குத் தன் குழந்தையைக் கொடுக்காமல், தன் மகள் நல்வாழ்விற்காகவும் தன் பெற்றோரின் மருத்துவச் செலவிற்காக ஏற்பட்ட கடன்களைத் தீர்க்கும் பொருட்டும் மீண்டும் மருத்துவமனையில் தூப்புக்காரியாகவே மாறிப் போகிறாள் பூவரசி.

சமூகம்

குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்ட காலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கள் கூட்டம் ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பே சமூகம் எனப்படுகிறது. இச்சொல்லிற்கு “மக்கள் திரள்”¹ என்று மதுரை தமிழ்ப் பேரகராதி பொருள் தருகின்றது.

ஆதி மனிதர்கள் காடு மேடுகளில் தனியாக ஆதரவற்று விலங்குடன் தாமும் ஒரு விலங்காய் இருந்த நிலை மாறி, கூட்டம் கூட்டமாய் ஒன்றி ஓரிடத்தில் தங்கி வாழத் தலைப்பட்ட போதே சமூகம் உருவாயிற்று² என்று செ.ரா. பரமேஷ் சமூகத்திற்கான விளக்கத்தினைத் தருகின்றார்.

தனி மனிதனால் தொடங்கி, பின் மனைவி மக்களிடமிருந்து அன்பு முற்றி, விருந்தோம்பல் பார்த்து இனம் தழுவி, ஒப்புரவாற்றி, உற்றார்க்கும் மற்றவர்க்கும் உதவும் நெறியிலே படர்ந்து, கடைசியாக நாடு தாண்டி உலகளவு சேரும் தன்மையுடையது சமூகம்³ என்று அ.மு. பரமசிவானந்தம் குறிப்பிடுகின்றார்.

மனிதன் ஒருவன் மட்டுமே தனித்து வாழ முடியாது. அவனுடைய அன்றாடத் தேவைகளை நிறைவு செய்ய பிற மனிதர்களின் உதவியை நாட வேண்டியுள்ளது. ஆகையால் மனிதர்கள் சேர்ந்து வாழ்கின்ற பல்வேறு குடும்பங்களின் கூட்டுத் தொகுப்பே சமூகமாகக் கருதப்படுகின்றது.

சமூகச் சிக்கல்கள்

சமூகச் சிக்கல்கள் என்பது சமூகத்தில் வாழும் மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் பிரச்சனைகளைக் குறிக்கக் கூடியதாகும்.

ஒரு சமூகம் தன் மக்களிடையே ஒற்றுமை உணர்வை ஏற்படுத்த முடியாத நேரத்திலும், அதனுடைய சட்டத்திட்டங்கள் பின்பற்றப்படாத நேரத்திலும், அதனுடைய பண்பாட்டு நெறிகள் வருங்காலச் சமூகத்திற்குக் கிடைக்காத நேரத்திலும் சமூகச் சிக்கல்கள் எழுகின்றன⁴ என வாழ்வியற் களஞ்சியம் விளக்கம் தருகின்றது.

மேலும், "ஒரு சமுதாயத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களால் விருமப்பத் தகாதவையாகவும் வெறுத்தொதுக்கப்பட வேண்டியனவாகவும் கருதப்படும் நடத்தை முறைமைகள் அல்லது சூழல்கள் சமூகச் சிக்கல்களாகக் கருதப்படும்"⁵ என்று மறைமலை விளக்கம் தருகின்றார்.

வறுமை, வேலையின்மை, கல்வியறிவின்மை, சாதி மத வேறுபாடு, குழந்தைத் தொழில், போதைப் பழக்கம் போன்றவை சமூகச் சிக்கல்களாகக் கருதப்படுகின்றன. அவ்வகையில் *தூப்புக்காரி* புதினத்தில் எழுகின்ற சிக்கல்கள் மனிதர்களின் வாழ்க்கைத் தரத்தையும் முன்னேற்றத்தையும் பாதிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

தூப்புக்காரி புதினத்தில் அமைந்த சமூகச் சிக்கல்கள்

தமிழ்ச் சமூகத்தின் அடித்தட்டு மக்களின் வாழ்க்கையை வெளிப்படுத்தும் படைப்பாக இப்புதினம் அமைகின்றது. இப்புதினத்தில் பின்வரும் சிக்கல்கள் ஆழமாகப் பரிசீலிக்கப்படுகின்றன:

1. சாதிய அடக்குமுறை
2. பெண்ணிய அடக்குமுறை
3. தொழிலின் அவமதிப்பு
4. பொருளாதாரச் சுரண்டல்

சாதி – சொல்லாய்வு

சாதி என்பது தமிழ்ச் சொல் அன்று. ஜாதி என்ற வடமொழிச் சொல்லே சாதி என்று தமிழில் வழங்குகின்றது. சாதி என்பதற்கு 'பிறப்பு', 'பிறந்த நிலை' என்று தமிழ்ப் பேரகராதி விளக்கம் தருகின்றது.

தொல்காப்பியத்தில் சாதி என்ற சொல் காணப்பட்டாலும் அது மக்களைச் சுட்டுவதாக இல்லை என்பதை,

"நீர்வாழ் சாதியுள் அறுபிறப்பு உரிய"⁶ (தொல். மரபியல். 44)

என்ற நூற்பா உணர்த்துகின்றது. அதில் சாதி என்ற சொல் நீரில் வாழும் உயிரினங்களை மட்டுமே குறிக்கிறது. இக்கருத்திற்கு வலுச்சேர்க்கும் விதமாக, "சாதி என்ற சொல் மக்களைக் குறிக்கும் சொல்லாகப் பண்டைக் காலத்தில் வழங்கவில்லை"⁷ என்று சாமி. சிதம்பரனார் குறிப்பிட்டுள்ளார்.

சாதிப் பிரிவுகள்

பழங்காலத்தில் தொழில் அடிப்படையில் சாதிகள் பிரிக்கப்பட்டன. உழவுத் தொழிலே முதன்மையான தொழிலாக இருந்தது. உழவுத் தொழில் செழித்திருக்கும் இடத்தில் உழவர்கள் பயிர்களை விதைத்தனர். அவற்றை விலங்குகள் அழிக்காமல் காக்கக்கூடிய வீரர்களையும், விளைந்த பண்டத்தை வாங்கி வரும் வணிகர்களையும் தோற்றுவித்தனர். அவை பல்வேறு தொழில்களாகப் பிரிந்தன.

“பழமையான உழவுச் செல்வம் படைத்த தமிழ் மக்களிடையே தொழிலால் பல பிரிவுகள் பிறந்தன என்பதில் ஐயமில்லை”⁸ என்று சாமி. சிதம்பரனார் சாதிகள் பிறந்த சூழலைக் குறிப்பிடுகின்றார். இதன் வழி அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற பிரிவுகள் தோன்றியிருக்க வேண்டும் என்ற கருத்து புலனாகின்றது. மேலும்,

> *“அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும் / ஐவகை மரபின் அரசர் பக்கமும் / இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்”⁹ (தொல். புறம். 20)*

என்ற தொல்காப்பிய நூற்பா அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் போன்ற சமூகக் குழுக்களைக் குறிக்கின்றது. இவ்வாறாகச் சாதிகள் மனிதன் செய்யும் தொழில் அடிப்படையில் தான் பிறந்ததாகத் தொல்காப்பியம் விளக்குகின்றது.

சாதி பற்றிய அறிஞர்களின் கருத்துகள்

மகாத்மா காந்தி, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பகத்சிங், பாரதியார், பாரதிதாசன், தொ. பரமசிவன் முதலிய அறிஞர்கள் சாதி பற்றிப் பல்வேறு கருத்துகளைக் குறிப்பிடுகின்றனர். சான்றாக,

- “சாதிகள் இந்தியாவின் சாபக்கேடு”¹⁰ — அண்ணல் அம்பேத்கர்
- “சாதி என்பது மனிதனை மனிதனாக வாழ விடாத சங்கிலி”¹¹ — தந்தை பெரியார்
- “இந்தியாவில் சமூகம் என்பதே சாதிப் படிவங்களால் ஆனது. மதத்தை விட சாதி என்னும் நிறுவனம் பல நூற்றாண்டுகள் மூத்தது”¹² — தொ. பரமசிவன்

அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார் முன்னெடுத்த திட்டங்கள் மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தாலும் முழுமையான சமூக மாற்றத்தைச் சமூகம் பெறவில்லை என்பது நினைவு கூரத்தக்கது. சாதியும் புதிய புதிய வடிவங்களில் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கின்றது. ஒடும் இரத்தத்தின் நிறமும் உதிரும் கண்ணீரின் சுவையும் எல்லா மனிதர்களுக்கும் ஒன்றென்பதை மறந்து, மனிதர்கள் வர்க்கப் பேதத்தினால் பிளவுபட்டுக் கிடப்பதை ஒவ்வொரு இலக்கியவாதியும் தங்கள் படைப்புகளின் வழி உணர்த்துகின்றனர்.

தூப்புக்காரி புதினத்தில் சாதிய அடக்குமுறை

சமூகத்தின் அடித்தட்டில் வாழும் தூய்மைப் பணியாளர்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு சாதிய அடிப்படையிலான ஒடுக்குமுறையை இப்புதினம் வெளிப்படுத்துகின்றது.

"சாதி என்பது சமுதாய அமைப்பில் இயங்கும் ஒரு தனிப்பட்ட குழுவைக் குறிக்கும். இக்குழுவில் இடம்பெறும் தகுதி பிறப்பால் அமைகிறது. அதனால் ஒரு சாதியில் பிறந்தவர் வேறு சாதிக்கு மாற இயலாது"¹³ என்று பக்தவச்சல பாரதி மனிதனைப் பாகுபடுத்தும் சாதி என்ற கொடிய பழக்கம் சமூகத்தில் கலந்துள்ளதைக் குறிப்பிடுகின்றார்.

வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் மக்கள் அன்றாட வாழ்க்கைப் பயணத்திற்காக எந்தத் தொழிலாக இருந்தாலும் சுயமரியாதைப் பார்க்காமல் செய்கின்றனர். ஆனால் திருமணம் என்று வரும் பொழுது அவரவர் சாதியில் தான் இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றனர். இக்கருத்தினை,

> *"சாதியின் பெயரால் மதத்தின் பெயரால் சண்டைகள் வருவதில்லை. ஆனால் சாதி என்ற கட்டமைப்பைத் திருமணத்தில் தவறாது காட்டி விடுவார்கள்" (தூப்புக்காரி, ப. 20)*

என்ற வரிகள் வழி, துப்புரவு செய்யும் கனகம் கூட தன் மகள் பூவரசியைத் தன்னுடைய சாதியிலே திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று எண்ணுவதை அறிய முடிகின்றது.

பண்டைய காலங்களில் மக்கள் செய்த தொழில்களின் அடிப்படையில் குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். சில குழுக்கள் அதிகாரம், நிலம், கல்வி ஆகியவற்றைத் தங்களிடம் வைத்துக் கொண்டனர். அவர்கள் தங்களை மேலானவர்கள் என்றும் மற்றவர்களைத் தாழ்ந்தவர்கள் என்றும் காட்டத் தொடங்கினர். இதனை,

> *"ஒவ்வொரு தொழிலுக்குப் பின்னால ஒரு சாதிய வச்சி மனுசங்கள அது வச்சே தரம் பிரிச்சாங்க" (தூப்புக்காரி, ப. 60)*

என்பதைத் தூப்புக்காரி புதினம் படம் பிடித்துக் காட்டுகின்றது. சாதி மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு சமூக அநீதிக் கட்டமைப்பு என்று அம்பேத்கரும், சாதி மதம் மனிதனை அடிமைப்படுத்தும் கருவி என்று பெரியாரும் வலியுறுத்துகின்றனர். மேலும் அவற்றை மாற்றுவது மனிதர்களின் பொறுப்பு என்பதனையும் சுட்டுகின்றனர்.

> *"சாதி மதமெல்லாம் மனுஷங்க உண்டாக்குன அடிமத்தனம் மூடத்தனம் எல்லாத்தையும் கட்டிப்பிடிச்சி அதான் ஒழுக்கம்ண்ணு வாழ்ந்தா நாம வாழ்க்கையை இழந்திடுவோம்" (தூப்புக்காரி, ப. 26)*

என்று மாரி கதாப்பாத்திரத்தின் வழியாக சாதியானது உடைக்கப்படுவதை இப்புதினம் எடுத்துக் காட்டுகின்றது.

பெண்ணியம்

பெண்ணியம் என்பது பெண்களைப் பற்றிக் கூறும் சமூக அமைப்பாகும். 'பெமினா' என்ற இலத்தீன் சொல்லிலிருந்து வந்ததே 'பெமினிசம்' என்று குறிப்பிடுவர். இச்சொல் தமிழில் பெண்ணியம், பெண்ணிலை வாதம், பெண் நலக் கொள்கை ஆகிய சொற்களால் அழைக்கப்பட்டு வருகிறது.

பெண்கள் தாம் விரும்பியப்படியே தாமாகவே முடிவெடுத்து வாழ்க்கையை நடத்திச் செல்லும் சமூக அமைப்பே பெண்ணியமாகும். பெண்களைச் சமுதாயத்தில் முன்னேற்றுவதே பெண்ணியத்தின் சிறந்த குறிக்கோளாகும்.

"பெண்ணியம் என்பது ஆண்களுக்கு எதிரானது அல்ல. ஒட்டு மொத்தமான சமூக விடுதலையை நோக்கி இயங்குவதாகும். ஆண்மைக் குணங்கள் பெண்மைக் குணங்கள் என்பனவெல்லாம் மனிதனால் உருவாக்கப்பட்டவையே அன்றி வேறில்லை"¹⁴ என்று பெண்ணியம் பற்றி விளக்கம் தருகின்றார் வாசுகி ஜெயரத்னம்.

தூப்புக்காரி புதினத்தில் பெண்ணிய அடக்குமுறை

பெண்ணிய அடக்குமுறை என்பது பெண்கள் சமூகம், குடும்பம், பொருளாதாரம், அரசியல் போன்ற பல துறைகளில் ஆணாதிக்க அமைப்பினால் சந்திக்கும் ஒடுக்குமுறைகளைக் குறிப்பதாகும். தந்தை பெரியார் *பெண் ஏன் அடிமையானாள்* என்ற நூலில் பெண்ணியக் கருத்துக்களைப் பெரிதும் வெளிப்படுத்தியுள்ளார்.

> *"மனிதப் பிரவி கொண்ட ஆணும் பெண்ணும் இயற்கைத் தத்துவத்திலும் சமுதாய வாழ்க்கைத் தன்மையிலும் ஒருவருக்கொருவர் தாழ்ந்தவர்களல்ல என்பதை அறிவுடைய உலகம் மறுத்தற்கியலாது. ... இவ்வாறிருக்கத் திமிர் படைத்த ஆணுலகம் பெண்ணுலகத்தைத் தாழ்த்தி இழித்து அடிமைப்படுத்தி வருத்துதல் முறைமையும் நியாயமுமாகுமா?"¹⁵*

என்று பெரியார் தன் நூலில் பெண் உரிமைக்கான வினாவினை எழுப்புகின்றார். சமூகத்தின் விளிம்பு நிலையில் உள்ள பெண்களின் வலி, அவமானம், போராட்டம் மற்றும் அவர்கள் மீது ஏவப்படும் பல்வேறு அடக்குமுறைகளை *தூப்புக்காரி* புதினம் கையாளுகிறது.

"பெண் வாழ்க்கை பெருமை மிக்கது என்பது உண்மை; அதே அளவு போராட்டம் மிக்கது என்பதும் உண்மை"¹⁶ என்ற சித்ராவின் வரிகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

பூவரசி போன்ற இளம்பெண்கள் காதல், நம்பிக்கை என்ற பெயரில் சுரண்டப்படுவதையும், அதற்குரிய விளைவுகளை அவர்கள் மட்டுமே சந்திக்க நேரிடுவதையும் இப்புதினம் காட்டுகின்றது. வறுமையில் வாடும் பெண்களுக்குக் காதல் வந்தால் அது வாழ்நாள் சாபமாக மாறி விடுகிறது. பெண் காதலித்து பெற்றவர்கள் சம்மதிக்கவில்லை என்றால் போராடலாம்; ஆனால் காதலித்தவனே

வேண்டாம் என்று விலகினால் என்ன செய்ய முடியும்? பூவரசியின் நிலையும் அது போல் தான் அமைகின்றது.

ஆணிற்கு ஆசை வந்தால் காதல் என்றும், பெண்ணிற்கு ஆசை வந்தால் காமம் என்றும் பெயர்ச் சூட்டி, ஒழுக்கமற்றவள் எனப் பெண்களின் உணர்வினைக் கட்டுப்படுத்துகின்றது இச்சமூகம். கற்பு என்பது பெண்களுக்கு மாத்திரம் சம்பந்தப்பட்டதல்ல என்ற பெரியாரின் கருத்தினைப் பதிவு செய்வதாக இந்தநிகழ்வுகள் அமைகின்றன. காதலும் தகுதி பார்த்தே வர வேண்டும் என்பதைப் பூவரசியின் நிலை உணர்த்துகின்றது.

> *"ஒரு கோடி கனவுகளச் சுமந்து தன்னைச் சுற்றிய எல்லாக் கடமைகளையும் செய்து ஒழைக்கிற ஐம்பூதங்களின் இயக்கங்களையும் கொண்ட வுடம்புல காமம் பொதுவானது. ஆனா அதுக்காக மட்டும் வாழ்றது தான் முட்டாள்தனம்" (தூப்புக்காரி, ப. 118)*

என்ற மாரியின் வரிகள், அவ்வளவு தான் வாழ்க்கை முடிந்து விட்டது என்று நினைக்கும் தருவாயில் இருக்கும் பூவரசிக்கு வாழ்க்கையை மீண்டும் மலரச் செய்கின்றன.

தொழிலின் அவமதிப்பு

சுற்றுப்புறம் தூய்மை இல்லையென்றால் பல நோய் கிருமிகள் பரவும். பெருந்தொற்றுக் காலத்தில் தான் தூய்மைப் பணியாளர்களின் தியாகம் தெரிகின்றது. அசுத்தத்தோடு அசுத்தமாக வாழ்ந்து நாட்டைச் சுத்தம் செய்பவர்கள் சுயமரியாதைப் பார்க்காமல் இந்த வேலையைச் செய்கின்றனர். வீட்டுக் கழிவறையில் துர்நாற்றம் வந்தாலே மூக்கைப் பொத்திக் கொண்டு முகம் சுழிக்கிறவர்களின் மத்தியில், துர்நாற்றத்தைப் பெரிதுபடுத்தாமல் வேலை செய்யும் தூய்மைப் பணியாளர்கள் சமூகத்தின் உயர்ந்த மரியாதைக்குரியவர்கள்.

பூவரசியின் தாய் கனகமும் அவளுடன் பணிபுரியும் ரோஸ்லியும் திருமண மண்டபத்திற்கு எச்சில் இலை எடுக்கப் போகிறார்கள். இருவரும் பசியின் மயக்கத்தினால் பந்தி ஆரம்பிக்கும் முன்னே உணவு உண்ண ஆரம்பிக்கின்றனர்.

> *"என்ன பழக்கம் இது? எலப்பறக்க வந்தவங்க இப்டி ஊருக்குமுன்ன தின்ன இருக்குறது நல்லது இல்ல. இவங்களுக்கு மெட்டுராசு வரைக்கும் போணும். ரெண்டு பேரும் எழும்புங்க. அங்க ஆக்குபெரையில போய் தின்னங்க" (தூப்புக்காரி, ப. 42)*

என்று, வாயில் வைத்த உணவு தொண்டையில் இறங்கும் முன் மனோவின் மாமன் அவர்களைத் திட்டி அனைவருக்கும் முன் அகிங்கப்படுத்திப் பந்தியிலிருந்து வெளியேற்றுகிறான். சமூகத்தினரால் இழிதொழில் என்று ஒதுக்கப்பட்டதும், அத்தொழிலைச் செய்யும் தன்னையும் இச்சமூகத்தினர் ஒதுக்கியதையும், அத்தகைய தொழிலில் தன் மகளையும் ஈடுபடுத்தியதையும் எண்ணி மனம் உடைந்து போகிறாள் கனகம்.

தன் தாயின் இறப்பிற்குப் பின் பூவரசி துப்புரவுத் தொழிலுக்குத் தள்ளப்படுகிறாள். அதனால் உடலளவிலும் மனதளவிலும் பாதிக்கப்படுகிறாள். அதற்குத் தீர்வாக,

> *"இது தான் தொழிலுண்ணு எறங்கியிட்டா அப்புறம் எதப்பத்தியும் யோசிச்சப் பிடாது. ஏதோ அவமானத் தொழிலைச் செய்றதா நெனச்சி வெக்கப்படக் கூடாது. மனசுக்குள்ள தாழ்ந்தும் போகக்கூடாது. இந்த உலகத்துல சுத்தப்படுத்துற உயந்த தொழில் செய்யுறேண்ணு பெருமைப்பட தெரியணும். அப்ப கக்கலும் வராது. அருவருப்பும் வராது" (தூப்புக்காரி, ப. 79)*

என்று மாரி கூறிய வரிகள் நெஞ்சில் ஆழமாகப் பதிகின்றன. ஒரு புறம் அறிவியல் மாபெரும் வளர்ச்சியைக் காண்கிறது; மறுபுறமோ மனிதக் கழிவை மனிதனே வாரி அகற்றும் அவலநிலை காணப்படுகின்றது. இன்று வரை கழிவுகளை அப்புறப்படுத்த முறையான உபகரணங்களோ கருவிகளோ கண்டறியப்படாமல் ஏற்பட்ட உயிரிழப்புகள் எராளம்.

மேலும் எந்தத் தொழிலும் இழிவானத்தல்ல; உயர்ந்தது தான் என்பதை மனதில் பதித்து வாழ்ந்தால் வாழ்க்கை இன்பமயமாக அமையும் என்பதனை இப்புதினம் உணர்த்துகின்றது.

பொருளாதாரச் சுரண்டல்

பொருளாதாரச் சுரண்டல் என்பது, ஒரு மனிதனின் உழைப்பை முழுமையாகப் பயன்படுத்தி, அதற்குரிய நியாயமான ஊதியம், உரிமை, மரியாதை, பாதுகாப்பு வழங்காமல் அதிகாரமுள்ளவர்கள் அல்லது பணக்கார வர்க்கத்தினைச் சேர்ந்தவர்கள் லாபம் அடைவதைக் குறிக்கின்றது.

தூய்மைப் பணியாளர்களின் கடின உழைப்புக்குக் கிடைக்கும் குறைவான ஊதியம், பொருளாதாரச் சூழ்நிலையால் கல்வி போன்ற வாய்ப்புகளை இழத்தல், சமூகத்தில் அசுத்தமானவர்களாகக் கருதப்படுதல் போன்றவை இப்புதினத்தில் சுரண்டலின் வடிவங்களாகச் சித்தரிக்கப்படுகின்றன.

> *"அவர்கள் பதட்டத்தை அறியாத காகித ரூபாய் கழிவு நீரில் அடித்துச் செல்லப் படுவதைக் கண்ணீரோட பார்த்து நின்றாள். எப்போமே உழைப்பு வீணாகிப் போகும் போது உள்ளம் உடைந்து போகும்" (தூப்புக்காரி, ப. 38)*

துன்பத்தோடு அனுபவித்த உழைப்பிற்குப் பலனில்லாமல் போனதை எண்ணி கனகம் மனம் வருந்துகிறாள் என்ற நிகழ்வு நெஞ்சை நெகிழ வைக்கின்றது.

> *"என்ன பெரிய நெலம. கொம்மா கொஞ்சம் கடன்பட்டிருப்பா? அதுக்காக இப்டி அடிமையாயிட வேண்டியது தானா. ஒரு கம்ப்யூட்டரு அது இதுண்ணு படிச்சி பெரிய வேலையில போயிடப்படாதா? இந்த உலகத்துல நெறைய கண்டுபிடிக்கிறாங்க. ஆனா அழுக்கு வார சாக்கட கழுவ மட்டும் ஒரு எழவும் கண்டுபிடிச்சேல. அத நீ கண்டுபிடிப் புள்ள" (தூப்புக்காரி, ப. 78)*

என்ற மாரி கதாபாத்திரத்தின் வாயிலாக, கல்வி ஒன்றே அனைத்திற்கும் தீர்வு என்பது சுட்டப்படுகிறது.

முடிவுரை

தூப்புக்காரி புதினத்தில் சமூகப் பிரச்சனைகளாக எடுத்துரைக்கப்பட்டுள்ள சாதிய அடக்குமுறை, பெண்ணிய அடக்குமுறை, தொழிலின் அவமதிப்பு, பொருளாதாரச் சுரண்டல் ஆகியவற்றிற்கான தீர்வாக, மாரி என்னும் கதாபாத்திரத்தின் மூலம் கல்வி கற்றலே அனைத்துப் பிரச்சனைகளுக்கும் கருவியாக அமையும் என்ற கருத்து எடுத்துரைக்கப்படுகின்றது.

சமூகத்தின் அடித்தளத்தில் நிறுத்தப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அவர்கள் துயரத்தை வெளிச்சமிடும் இத்தகைய படைப்புகள் இன்றியம்வியமானவை. தொழிலின் அடிப்படையில் மனிதர்களைத் தரம் பிரிக்கும் மனநிலை மாறி, எந்தத் தொழிலும் இழிவானதல்ல என்னும் உணர்வு வளர்வதும், கல்வி வழியாக அடித்தட்டு மக்கள் தம் வாழ்வின் நிலையை மாற்றிக்கொள்வதும் இப்புதினம் முன்வைக்கும் தீர்வாக அமைகின்றன.

அடிக்குறிப்புகள்

References

மலர்வதி, தூப்புக்காரி (புதினம்)
மதுரை தமிழ்ப் பேரகராதி, ப. 682
பரமேஷ் செ.ரா, சமூக உளவியல், ப. 4
பரமசிவானந்தம் அ.மு, சமுதாயமும் பண்பாடும், ப. 16
வாழ்வியற் களஞ்சியம், தொகுதி-8, ப. 526
மறைமலை சி.இ, இலக்கியமும் சமூகவியலும், ப. 73
சுப்பிரமணியன் ச.வே, தொல்காப்பியம், ப. 424
சாமி. சிதம்பரனார், பழந்தமிழ் வாழ்வும் வளர்ச்சியும், ப. 12
சாமி. சிதம்பரனார், பழந்தமிழ் வாழ்வும் வளர்ச்சியும், ப. 16
சுப்பிரமணியன் ச.வே, தொல்காப்பியம், ப. 424
இரத்தினம் வீ, அம்பேத்கர் வாழ்க்கை வரலாற்றுக் களஞ்சியம், ப. 233
குடியரசு, 22.11.1931
பரமசிவன் தொ, அறியப்படாத தமிழகம், ப. 142
பக்தவச்சல பாரதி சீ, பண்பாட்டு மானிடவியல், ப. 311
வாசுகி ஜெயரத்தினம், பெண்ணியச் சுவடுகள், ப. 2
தந்தை பெரியார், பெண் ஏன் அடிமையானாள், ப. 53
சித்ரா சி, இலக்கியப் போக்குகள், ப. 195